பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**08 07 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தீவிரவாதத்தை அனைத்து வடிவிலும் எதிர்ப்பதாக இந்தியாவும் - இந்தோனேஷியாவும் கூட்டாக தெரிவித்
2. துள்ளன.

3. எல்-நினோ-வால் ஏற்படக்கூடிய தாக்கங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, பல்வேறு துறைகளின் உயரதிகாரிகளுடன் பிரதமர் அலுவலகம் ஆலோசனை நடத்தியுள்ளது.

4. இந்தியா - பஹ்ரைன் இடையேயான இருதரப்பு நல்லுறவுகள் மேலும் வலுப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

5. இந்தியாவின் பொம்மைகள் ஏற்றுமதி, 17 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

6. வெனிசுலாவில் கடந்த மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3 ஆயிரத்து 685ஆக அதிகரித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தீவிரவாதத்தை அனைத்து வடிவிலும் எதிர்ப்பதாக இந்தியாவும் - இந்தோனேஷியாவும் கூட்டாக தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக இரு நாடுகளும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் சர்வதேச சட்டத்திற்கு உட்பட்டு தீவிரவாத த்தை முறியடிப்பதற்கான உலகளாவிய முயற்சிகளை உறுதியாகவும், ஒருங்கிணைந்தும் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஜகார்தாவில் இந்தேனேஷிய அதிபர் திரு. **Prabowo Subianto**-வை பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்தினார்.

தீவிரவாதத்திற்கு நிதி வழங்குவதை தடுக்கும் நடவடிக்கையில் ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச அளவில் தீவிரவாத செயல்களுக்கு நிதி வழங்கும் நாடுகளுக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்வது என்றும் பேச்சுவார்த்தையில் உறுதியளிக்கப்பட்டதாக கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் தீவிரவாதிகளுக்கும், தீவிரவாத அமைப்புகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பது என்று அப்போது

இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதைத்தொடர்ந்து இந்தோனேஷிய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு பசிபிக் மண்டலத்தில் அமைதிக்கும், அரசியல் நிலைப்பாட்டை உறுதி செய்யவும் வழிவகுக்கும் என்று தெரிவித்தார்.

பின்னர் ஜகார்தாவில், இந்திய வம்சாவளியினர் மத்தியில் உரையாற்றிய திரு. நரேந்திர மோடி, உலகளாவிய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதில் இந்திய பொருளாதாரம் முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றம் என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் தமது அரசு செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

100 கோடிக்கும் அதிகமான மக்களின் கனவுகளை நனவாக்கும் வகையில் வளர்ச்சியை நோக்கி இந்தியா பயணித்து வருவதாகவும், எரிசக்தி முதல் செமிகண்டக்கடர் உற்பத்தி வரை பல்வேறு துறைகளில் விரைவான முன்னேற்றத்தை இந்தியா கண்டு வருவதாகவும் கூறினார்.

இந்தியாவும் - இந்தோனேஷியாவும் வளர்ச்சிக்கான பொதுவான தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுவதாகவும், இரு நாடுகளும்

இணைந்து வேகமான வளர்ச்சியை நோக்கி சென்றுகொண்டிருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்தோனேஷிய பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகருக்கு செல்கிறார்.

அந்நாட்டில் 3 நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அவர், இந்தியா-ஆஸ்திரேலியாவின் 3வது உச்சிமாநாட்டில் அந்நாட்டுப் பிரதமர் ஆண்டனி அல்பனீசுடன் பங்கேற்கிறார்.

மேலும் இந்தியா - ஆஸ்திரேலியா தலைமைச் செயல் அதிகாரிகள் அமைப்பின் நிகழ்ச்சியிலும் பிரதமர் பங்கேற்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பல்வேறு துறைகளில் எல்-நினோ ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பிரதமரின் முதன்மைக் செயலாளர் டாக்டர் பி.கே. மிஸ்ரா தலைமையில் தில்லியில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

பல்வேறு முக்கிய துறைகளின் செயலாளர்கள் மற்றும் உயரதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

எல்-நினோவால் ஏற்படக்கூடிய அனைத்து சூழலையும் கண்காணிக்கவும், தாமதமாகும் பருவமழையால் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய மாவட்டங்களில் ஏற்படும் தாக்கம் குறித்து சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் இணைந்து மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும், அப்போது பிரதமரின் முதன்மைச் செயலாளர் அறிவுறுத்தினார்.

கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் கிடைப்பதை உறுதி செய்வதுடன், அதற்கான பணிகளை கண்காணிக்க வேண்டும் என்று கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

பாதிப்பு ஏற்படும் மாவட்டங்களில் போதிய குடிநீர் கிடைப்பதை உறுதி செய்வதுடன், நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும், சிக்கனமாக நீரை பயன்படுத்துவதை ஊக்விக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

<<<<>>>>

இந்தியா - பஹ்ரைன் இடையேயான இருதரப்பு நல்லுறவுகள் மேலும் வலுப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பஹ்ரைனுக்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்ட அவர், அந்நாட்டுப் பிரதமர் சல்மான் பின் ஹமத் அல் கலீஃபா

முன்னிலையில் மன்னர் **Hamad bin Isa Al-Khalifa**-வை சந்தித்துப் பேசினார்.

துணைப் பிரதமர் **Shaikh Khalid bin Abdulla Al-Khalifa**-வையும் டாக்டர் ஜெய்சங்கர் தனியாக சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது பஹ்ரைன் உடனான இந்தியாவின் நீண்டகால நல்லுறவு மேலும் வலுப்படும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உறுதிப்பாட்டை அமைச்சர் எடுத்துக் கூறினார்.

பஹ்ரைனில் வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ததற்காக அந்நாட்டு தலைவர்களுக்கு டாக்டர் ஜெய்சங்கர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மேலும் இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் பலனளிக்க கூடிய பல்வேறு விஷயங்கள் குறித்தும், மண்டல அளவிலான பிரச்சினைகள் குறித்தும் அந்நாட்டுத் தலைவர்களுடன் டாக்டர் ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியாவில் இருந்து பொம்மைகள் ஏற்றுமதி சென்ற நிதியாண்டில் 17 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய பொம்மைகள் சங்கம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

உயர் தரத்திலான பொம்மைகள் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் போட்டி நிறைந்த நாடாக உருவாகியுள்ளது என்று அவர் கூறினார்.

வெளிநாடுகளில் இருந்து பொம்மைகள் இறக்குமதி செய்த நிலை மாறி தற்போது **153** நாடுகளுக்கு பொம்மைகளை இந்தியா ஏற்றுமதி செய்து வருவதாகவும், இதன்மூலம் கடந்த **2019**ஆம் ஆண்டில் இருந்து பொம்மைகள் இறக்குமதி **71** சதவீதம் குறைந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தரமான தற்சார்பு உற்பத்தி அதிகரித்திருப்பதே இதற்கு காரணம் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

இந்தியாவுடனான எல்லை தொடர்பான பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும் என்று நேபாள வெளியுறவு அமைச்சர் **Shishir Khanal** தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இதனை தெரிவித்த அவர், இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லை தொடர்பான பணிக்குழுக் கூட்டம் அடுத்த மாதம் நடைபெற இருப்பதாக கூறினார்.

**Lipukekh, Limpiyadhura, Kalapani** ஆகிய எல்லைப் பகுதிகளில் இரு நாடுகளுக்கும் இடையே பிரச்சினை தொடர்வதாகவும், இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

வெனிசுலாவில் கடந்த மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை **3** ஆயிரத்து **685**ஆக அதிகரித்துள்ளது.

தலைநகர் கராகஸ் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த மாதம் **24**ஆம் தேதி அடுத்தடுத்து **2** சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டதில் ஏராளமான கட்டிடங்கள் தரைமட்டமாயின.

**100** ஆண்டுகளுக்குப் பின்னர் வெனிசுலாவில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கம் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3 ஆயிரத்து 685ஆக அதிகரித்திருப்பதாகவும், 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவம் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட சைமன் போலிவர் சர்வதேச விமான நிலையத்தில் விரைவில் வர்த்தகப் போக்குவரத்து தொடங்கும் என்று அந்நாட்டு இடைக்கால அதிபர் Delcy Rodriguez தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணையில் 3 வணிக கப்பல்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஈரான் மீது அமெரிக்க ராணுவம் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க ராணுவம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் சர்வதேச கடல் பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் மற்றும் கப்பல் ஊழியர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் விமான பாதுகாப்பு கட்டமைப்புகள், கடலோர கண்காணிப்புக் கருவிகள் மற்றும் தரையில் இருந்து வானில் உள்ள

ஏவுகணைகளைக் குறிவைத்து தாக்குதல் என்ற அடிப்படையில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியிருப்பதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் சுவிட்சர்லாந்து அணி காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

வான்கூவரில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அந்த அணி கொலம்பியாவை பெனால்டி சூட்-அவுட் முறையில் **4-3** என்ற கோல் கணக்கில் வென்றது.

அட்லாண்டாவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் எகிப்து அணியை **3-2** என்ற கோல் கணக்கில் வென்ற அர்ஜென்டினா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------

இந்தியாவுக்கு எதிரான **3**வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி **125** ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாட்டிங்ஹாமில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 201 ரன் எடுத்தது.

ஃபில் சால்ட் அதிகபட்சமாக 70 ரன் சேர்த்தார்.

சாம் கரண் ஆட்டமிழக்காமல் 41 ரன் எடுத்தார்.

202 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி அடுத்தடுத்து சொற்ப ரன்களில் விக்கெட்டுகளை இழந்தது.

11 புள்ளி 4 ஓவரில் 76 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

இங்கிலாந்து அணி இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

**<<<<The End>>>>**